**டிசம்பர் – 29**

# தமிழ்நாடு செய்திகள்

## உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் – தமிழ்நாடு

- தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 மற்றும் 30 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.
- இந்த தேர்தலானது எம். பழனிசாமி என்பவரின் தலைமையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்டது.
- கடந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலானது 2011 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்றது.
- தற்போது, மொத்தமுள்ள 37 மாவட்டங்களில், 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் மட்டுமே நடத்தப் பட்டது.
- காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய ஒன்பது மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடத்தப் படவில்லை.
- மாநிலத்தில் உள்ள கிராமப்புற வாக்காளர்கள் தங்கள் பகுதிகளில் இருந்து நான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.
- இது கிராமப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்கள், கிராமப் பஞ்சாயத்துத் தலைவர், ஒன்றியப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்கள் மற்றும் மாவட்டப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்களுக்காக நடத்தப்படும் ஒரு நேரடித் தேர்தலாகும்.
- கிராமப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் மற்றும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் ஆகியோருக்கான தேர்தல் எந்தவொரு கட்சியையும் சாராத வகையில் நடைபெறும்.
- மாவட்டப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர், ஒன்றியப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் ஆகியோருக்கான தேர்தல் கட்சியின் அடிப்படையில் நடைபெறும்.
- மாவட்டப் பஞ்சாயத்து மற்றும் ஒன்றியப் பஞ்சாயத்து ஆகியவற்றிற்கான தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர் ஆகிய பதவிகளுக்கான மறைமுகத் தேர்தலானது ஜனவரி 11 ஆம் தேதியன்று நடைபெற இருக்கின்றது.

### *தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் பற்றி*

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளானது 15 மாநகராட்சிகள், 148 நகராட்சிகள் மற்றும் 561 நகர்ப்புறப் பஞ்சாயத்துகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளானது 12,524 கிராமப் பஞ்சாயத்துகள், 388 ஒன்றியப் பஞ்சாயத்துகள் மற்றும் 33 இந்திய மாவட்ட கவுன்சில்கள்/மாவட்டப் பஞ்சாயத்துகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.


# தேசியச் செய்திகள்

## மனிதக் கழிவுகளை மனிதனே அள்ளுதல் குறித்த தரவு

- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகத்தின் தரவுகளின் படி, 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் வரை நாட்டில் சாக்கடைகள் மற்றும் கழிவுநீர்த் தொட்டிகளை சுத்தம் செய்யும் போது 282ற்கும் மேற்பட்டோர் இறந்து உள்ளனர்.
- கடந்த நான்கு ஆண்டுகளில் இந்தியாவில் உள்ள மாநிலங்களிடையே, தமிழ்நாடு 40

இறப்புகளை (மனிதக் கழிவினை மனிதன் அள்ளும் போது) பதிவு செய்துள்ளது.

- தமிழ்நாட்டைத் தொடர்ந்து ஹரியானா மாநிலத்தில் 31 இறப்புகளும் குஜராத் மற்றும் டெல்லி ஆகியவற்றில் தலா 30 இறப்புகளும் பதிவாகியுள்ளன.
- மேற்கண்ட மாநிலங்களில் விரைவான மற்றும் திட்டமிடப் படாத நகரமயமாக்கல் ஏற்பட்டுள்ளது.
- நாடு முழுவதும் 17 மாநிலங்களில் மனிதக் கழிவினை மனிதன் அள்ளும் தொழிலை மேற்கொள்ளும் தொழிலாளர்கள் சுமார் 60,440 அடையாளம் காணப் பட்டுள்ளனர்.
- இவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள், அதாவது சுமார் 35,472 நபர்கள், உத்தரப் பிரதேச மாநிலத்திலிருந்து மட்டும் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.
- இந்திய நாடாளுமன்றமானது மனிதக் கழிவுகளை மனிதன் அள்ளும் பணிக்கு தொழிலாளர்களை அமர்த்துவது மீதான தடை மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டம், 2013 என்பதனை இயற்றியுள்ளது. இச்சட்டம் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.
- துப்புரவு என்பது மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு கூறாகும். சாக்கடைகள் மற்றும் கழிவுநீர்த் தொட்டிகளை சுத்தம் செய்வதற்கான தொழிலாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளால் பணியாற்ற வைக்கப் படுகின்றார்கள்.
- ஜென்ரோபாட்டிக்ஸ் என்பது கேரளாவில் உள்ள திருவனந்தபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு இந்திய ரோபாட்டிக்ஸ் நிறுவனம் ஆகும்.
- 2018 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் கழிவுநீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்வதற்காக "பந்திகூட்" என்ற ஒரு ரோபோவை அறிமுகப் படுத்தியது.




## உணவு உரிமை மேளா

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சரான ஹர்ஷ் வர்தன் உணவு உரிமை மேளாவின் 2வது பதிப்பை புது தில்லியில் தொடங்கி வைத்தார்.
- நோய்களுக்கான உணவுகள் குறித்த 'தி பர்பில் புக்' என்ற ஒரு கையேட்டையும் மத்திய அமைச்சர் வெளியிட்டார்.

- மேலும் இவர் NetSCoFAN (உணவுப் பாதுகாப்பு மற்றும் பயன்பாட்டு ஊட்டச்சத்திற்கான அறிவியல் ஒத்துழைப்புக்கான அமைப்பு - Network for Scientific Co-operation for Food Safety and Applied Nutrition) என்பதனையும் தொடங்கினார்.
- உணவு உரிமை இந்தியா என்ற இயக்கமானது 2018 ஆம் ஆண்டில் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் கீழ் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் (Food Safety and Standards Authority of India - FSSAI) தொடங்கப் பட்டது.

## ரயில்வேயில் ஆட்சேர்ப்பு

- ரயில்வே துறையில் இனிப் புதிதாகச் சேர்க்கப்படுபவர்கள் அனைவரும் மத்தியப் பொதுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப் பணித் தேர்வுகளின் மூலம் ஐந்து சிறப்புப் பிரிவுகளின் கீழ் சேர்க்கப் படுவார்கள் என்று ரயில்வே வாரியம் தற்பொழுது முடிவு செய்துள்ளது.
- அரசானது ரயில்வேயின் எட்டு பிரிவுகள் மற்றும் அதன் துறை சார்ந்த பணிகளை "இந்திய ரயில்வே மேலாண்மைப் பணி" (Indian Railway Management Service - IRMS) என்ற ஒரே ஒரு சேவைப் பணியாக இணைத்துள்ளது.
- மேலும், ரயில்வே வாரியத்தின் தலைவர் தேசிய போக்குவரத்துத் துறையான ரயில்வேத் துறையின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் இந்திய ரயில்வேப் பணியின் அதிகாரியாகவும் இருப்பார். வேறு எந்தவொருப் பணியிலிருந்தும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப்பட மாட்டார்.
- மேலும், 35 ஆண்டு கால அனுபவம் உள்ள இந்திய ரயில்வே அதிகாரிகள் மட்டுமே தலைவர்/தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப் படுவார்கள்.


### *ரயில்வே வாரியத்தில் உள்ள உறுப்பினர்கள்*

- இந்தப் புதிய மாற்றங்களின் மூலம், தலைவர் மற்றும் அதன் 4 உறுப்பினர்கள் முறையே உள்கட்டமைப்பு, செயல்பாடுகள் & வணிக மேம்பாடு, நிதி மற்றும் பங்குகளை நிர்வகித்தல் ஆகியவற்றிற்குப் பொறுப்புடையவர்களாக இருப்பர்.
- இந்த வாரியமானது சில நிர்வாகம் சாராத சுயாதீன உறுப்பினர்களையும் கொண்டு இருக்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## ஆப்கான் அதிபர் தேர்தல்

- முதற்கட்ட தேர்தல் முடிவுகளின் படி, ஆப்கானிஸ்தான் அதிபரான அஷ்ரப் கானி இரண்டாவது முறையாக வெற்றி பெற்றுள்ளார்.
- இவர் தனது போட்டியாளரான அப்துல்லா அப்துல்லாவைத் தோற்கடித்துள்ளார்.
- 2001 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தலிபான்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் நடத்தப்படும் நான்காவது அதிபர் தேர்தல் இதுவாகும்.



# பொருளாதாரச் செய்திகள்

## பிரதான் மந்திரி வய வந்தனா யோஜனா – ஆதார்

- மத்திய அரசானது பிரதான் மந்திரி வய வந்தனா யோஜனாவின் (Pradhan Mantri Vaya Vandana Yojana - PMVVY) சந்தாதாரர்களுக்கு ஆதார் எண்ணை (தனித்துவமான 12 இலக்க உயிர்த்தரவு அடையாள எண்) கட்டாயமாக்கியுள்ளது.
- இது 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய மூத்த குடிமக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு ஓய்வூதியத் திட்டமாகும்.
- இது இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் (Life Insurance Corporation of India - LIC) மூலம் செயல்படுத்தப் படுகின்றது.
- PMVVY ஆனது 2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டின் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கைகளில் அறிவிக்கப் பட்டது.

## சூரிய ஆற்றல் - தேசிய அனல் மின் நிறுவனம்

- அரசிற்குச் சொந்தமான மின் நிறுவனமான தேசிய அனல் மின் நிறுவனமானது 2022 ஆம் ஆண்டில் 10 ஜிகாவாட் சூரிய ஆற்றல் உற்பத்தி திறனைச் சேர்க்கத் திட்டமிட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 175 GW தூய்மையான ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும் என்ற நாட்டின் லட்சிய இலக்கைக் கருத்தில் கொண்டதன் மூலம் இது முக்கியத்துவம் பெறுகின்றது.
- பெருமளவில் இது பசுமைப் பத்திரங்கள் மூலம் நிதியளிக்கப்பட இருக்கின்றது.
- தூய்மையான எரிசக்தித் திட்டங்களுக்குப் பசுமைப் பத்திரங்கள் வழங்கப் படுகின்றன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## போலி கடவுச்சீட்டு மற்றும் போலி நாணயத் தாள்களை (கள்ளநோட்டு) தடுத்து நிறுத்துவதற்கான மை

- கடவுச்சீட்டுகளைப் போலியாக அச்சிடுதல் மற்றும் நாணயத் தாள்களை கள்ள நோட்டாக மாற்றுதல் போன்ற பிரச்சினைகளை எதிர்த்துப் போராடுவதற்காக அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றம் (Council of Scientific and Industrial Research - CSIR) மற்றும் தேசிய இயற்பியல் ஆய்வகம் ஆகியவை இணைந்து மை ஒன்றை உருவாக்கியுள்ளது.
- ஒற்றைத் தூண்டு இரட்டை உமிழ்வு கொண்ட ஒளிரும் நிறமியின் அடிப்படையில் இந்த மை தயாரிக்கப் பட்டுள்ளது.
- இது உடன்ஒளிர்வு மற்றும் நின்றொளிர்வு ஆகிய நிகழ்வுகளின் கருத்தின் அடிப்படையில் உருவாக்கப் பட்டுள்ளது.
- தற்போது, நாணயத் தாள்கள் அலைநீளத்தின் உமிழ்வுடன் ஒரே ஒரு நிறத்தை மட்டுமே காண்பிக்கின்றன.
- இருப்பினும், விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட இந்த மையானது பணத் தாள்கள் அச்சிடப்பட்ட பிறகு நிறமி நிறத்தில் மாற்றங்களைக் கொண்டுள்ளது.
- சுற்றுப்புற ஒளியில் இந்த மையானது வெள்ளை நிறத்தைக் காட்டுகின்றது.
- இந்த மையானது புற ஊதா ஒளியில் வெளிப்படும் போது, அது சிவப்பு நிறமாக மாறும். புற ஊதா மூலத்தை அணைக்கும் போது அது பச்சை நிறமாக மாறும்.

***உடன்ஒளிர்வு மற்றும் நின்றொளிர்வு***

- உடன்ஒளிர்வு மற்றும் நின்றொளிர்வு ஆகிய இரண்டு நிகழ்வுகளின் போதும் கதிர்வீச்சானது மின்காந்தமானதாகவும் தன்னிச்சையானதாகவும் விளங்குகின்றது.
- உடன்ஒளிர்வின் போது மூலத்தை அணைத்த பின்னர் கதிர்வீச்சானது நிறுத்தப்படும்.
- மறுபுறம், நின்றொளிர்வின் போது, ஒளிர்வானது சில மணி நேரங்களுக்குத் தொடர்ந்து நீடிக்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## வெட்டுக்கிளிகள் ஊடுருவல் – குஜராத்

- குஜராத் மற்றும் ராஜஸ்தான் ஆகியவை புதிதாகப் பிறந்த வெட்டுக்கிளிகள் அல்லது உள்ளூரில் டிடிஸ் என்று அழைக்கப்படும் வெட்டுக்கிளிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றன.
- குஜராத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமாக பனஸ்கந்தா என்ற மாவட்டம் விளங்குகின்றது.
- பாகிஸ்தானின் சிந்து மாகாணத்திலிருந்து இந்தப் பூச்சிகள் பறந்து இங்கு வந்துள்ளன.
- செங்கடல் கடற்கரையில் உள்ள சூடான் மற்றும் எரித்திரியா ஆகிய நாட்டில் இந்த வெட்டுக்கிளிகள் தோன்றியுள்ளன.
- இந்தப் பூச்சிகள் பகலில் பறந்து இரவில் பண்ணைகளில் குடியேறுகின்றன. இவைகள் குடியேறுவதைத் தடுப்பது மிகவும் கடினமாகும்.
- இத்தாலியின் ரோம் நகரைத் தலைமையிடமாகக் கொண்ட உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது (FAO - Food and Agriculture Organization) DLISஐ (பாலைவன

வெட்டுக்கிளி தகவல் சேவை - Desert Locust Information Service) செயல்படுத்துகின்றது.

- இந்த வெட்டுக்கிளி ஊடுருவலானது ஜோத்பூரில் உள்ள வெட்டுக்கிளி எச்சரிக்கை அமைப்பினாலும் (Locust Warning Organization - LWO) கணிக்கப் பட்டது.
- இது ICARன் (இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றம் - Indian Council of Agricultural Research) கீழ் செயல்படுகின்றது.
- குஜராத், ராஜஸ்தான் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் உள்ள 2 லட்சம் சதுர கிலோமீட்டர் பாலைவனப் பகுதியை LWO அமைப்பு கண்காணிக்கின்றது.

# மாநிலச் செய்திகள்

## தேசியப் பழங்குடியின நடனத் திருவிழா

- தேசியப் பழங்குடியின நடனத் திருவிழாவின் 2019 ஆம் ஆண்டுப் பதிப்பானது சத்தீஸ்கரின் தலைநகரான ராய்ப்பூரில் நடைபெற்றது.
- தேசியப் பழங்குடியின நடனத் திருவிழா சத்தீஸ்கரில் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்தப் பழங்குடியின நடனத் திருவிழாவானது ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் நடைபெறுகின்றது. இது மத்தியப் பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.
- இந்தத் திருவிழாவை காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி தொடங்கி வைத்தார்.



## லோசர் விழா

- லடாக்கி அல்லது திபெத்தியப் புத்தாண்டை அனுசரிப்பதற்காக லடாக் ஒன்றியப் பிரதேசமானது லோசர் விழாவைக் கொண்டாடியது.
- 15 ஆம் நூற்றாண்டில் தோன்றிய லோசர் திருவிழாவானது நாட்டில் இமயமலை பரவியுள்ள அனைத்து மாநிலங்களிலும் வெவ்வேறு காலங்களில் அனுசரிக்கப் படுகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★